## நாடாளுமன்றத் தேர்தலை நடத்த அஞ்சும் பா.ஜ.க.!

இந்தியா முழுவதும் இதுவரை 350 தொகுதிகளில் பா.ஜ.க.வுக்கு எதிராக வலுவான போட்டியை ஏற்படுத்தும் வகையில், இந்தியா கூட்டணி தொகுதிப் பங்கீடு முடிந்துள்ளது.

இதன் உள்ளடக்கம் யாதெனில்,

இந்தியா முழுமையும் பற்றி எரியும் பா.ஜ.க. எதிர்ப்பலைதான்.

பா.ஜ.க. தலைமையிலான கூட்டணித் தொகுதிப் பங்கீடுகளை முடிக்கத் திணறி வருகிறது.

பா.ஜ.க. மீதான கடும் எதிர்ப்பலை,
டெல்லி விவசாயிகள் போராட்டம்,
தேர்தல் பத்திரம் ரத்து,
S.B.I மீதான கண்டனங்கள்

பலவும் ஒன்றிணைந்து தேர்தலையே தள்ளி வைக்க, பா.ஜ.க முயற்சிப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

தேர்தல் ஆணையரின் ராஜினாமாவும், சில மணி நேரங்களிலேயே ஜனாதிபதி அதை ஏற்றுக் கொண்டதும், சந்தேகத்தைக் கூடுதலாக்கியுள்ளது.

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்றார்கள்.
இப்போது ஒரே நாடு, தேர்தலே எதற்கு? என்கிறார்களோ?
பா.ஜ.க வீட்டுக்கும் நாட்டுக்கும்
தேர்தலுக்கும் கேடு.

**-சூர்யா சேவியர் முகநூல் பதிவிலிருந்து...**

## ஃப்ளாஷ்பேக்



தமிழ்ச்செல்வன்



### வரவேற்பு, வாழ்த்து!

முரசொலி நாளிதழில் பணிபுரிந்த என் தந்தை கயல் தினகரன், பின்னர், கழக இலக்கிய அணி இணைச் செயலாளராகவும் சென்னை நூலக ஆணைக் குழுவின் தலைவராகவும் பொறுப்பில் இருந்தவர். அவருடைய அழைப்பின் பேரில், அன்றைய சென்னை மாநகராட்சி மேயரும் இளைஞர் அணிச் செயலாளருமான தளபதி அவர்கள்,1999-ஆம் ஆண்டு பிப்ரவரி 14-ஆம் தேதி நடைபெற்ற தமிழ்ச்செல்வன்- மாலதி ஆகிய எங்களுடைய வரவேற்பு நிகழ்வில் பங்கேற்று வாழ்த்தினார்.

**-தமிழ்ச்செல்வன்,**
**புரசைவாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பாதுகாப்பு நிதி தந்த தி.மு.க!

1962-இல் சீன ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆதரவாகவும் நடைமுறை சாத்திய மானதுமான முதல் ஆதரவுக் குரலைக் கொடுத்தது தி.மு.கழகமே. எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் கூட்டத்தைக் கூட்டி, நாட்டைப் பாதுகாப்பதற்கான நிதியாக 35 ஆயிரம் ரூபாய் தி.மு.கழகத்தின் சார்பில், அளிக்கப்பட்டது. சீனப் போரில் பாதுகாப்பு நிதியாக, ஒரு கட்சியின் சார்பாக ஒரு சில மணி நேரத்தில், திரட்டிக் கொடுக்கப்பட்ட அதிகபட்ச நிதியாக இது அமைந்தது.

முதலில் முதல்வன் 2

# ‘முன்னோடி’ பந்தல்கள்!

**ந.வினோத்குமார்**





மறைந்துவிட்ட முன்னோடிகளின் பெயர்களில் ‘மாநாட்டு வாயில்கள்’ ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

*2024-ஜனவரி 21 அன்று, இந்தியாவே திரும்பிப் பார்த்த திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாடு, சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது.*

*பொதுவாக, திராவிட இயக்க மாநாடுகளில் மாநாட்டுப் பந்தல்கள், தோரண வாயில்கள் ஆகியவற்றுக்கு மறைந்த நம் இயக்கத் தலைவர்களின் பெயர்களைச் சூட்டுவது மரபு. அதன் காரணம், அந்த மாநாட்டில் அவர்களை முன்னிலைப்படுத்தி நினைவுகூர வேண்டும் என்பதுதான். மேலும் அந்தத் தலைவர்கள் யார், அவர்கள் செய்த சாதனைகள் என்ன என்பவை குறித்து இளைய தலைமுறையினரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதும் அந்தப் பெயர் சூட்டலின் நோக்கம்.*

*இந்த மரபு எங்கிருந்து, எப்போது தொடங்கியது? 1929-ஆம் ஆண்டு பிப்ரவரி 17, 18 ஆகிய தேதிகளில் அன்றைய சென்னை மாகாணம், செங்கல்பட்டில், சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாட்டை முன்னெடுத்தார் பெரியார். அந்த சுயமரியாதை மாநாடு நடைபெற்ற மாநாட்டுத் திடலுக்கு ‘சர் பிட்டி தியாகராயர் பெயர்’. மாநாட்டுப் பந்தலுக்கு ‘பனகல் அரசர்’ பெயர். மாநாட்டு மேடைக்கு ‘நாயர் அரங்கம்’ என்று பெயர்.*

*திராவிட இயக்க முன்னோடிகளின் பெயர்களை மாநாட்டுத் திடலுக்கும், பந்தலுக்கும், மேடைக்கும், நுழைவுவாயில்களுக்கும் வைத்து, நன்றி கூறும் உயரிய பண்பு, அந்த மாநாட்டில் இருந்துதான் தொடங்கியது.*

*இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால், எந்தப் பகுதியில் மாநாடு நடைபெறுகிறதோ அந்தப் பகுதியைச் சார்ந்த, மறைந்துவிட்ட முன்னோடிகளின் பெயர்களில் ‘மாநாட்டு வாயில்கள்’ ஏற்படுத்தப்பட்டிருக்கும். பின்னாட்களில், மாநில மாநாடுகள் மட்டுமல்லாது, கழகத்தின் சார்பாக நடைபெறுகின்ற இதர மாநாடுகளுக்குக் கூட இந்த மரபு பின்பற்றப்பட்டுள்ளது. 1968-ஆம் ஆண்டு ஜூலை 12 அன்று மாயவரம் வட்டம் மணல்மேட்டில் நடைபெற்ற இரண்டு நாள் சமுதாயச் சீர்திருத்த மாநாட்டில், கழக முன்னோடி ‘வெள்ளைச்சாமிப் பந்தல்’ என்று மாநாட்டுப் பந்தலும், ‘மாணவர் சாரங்கபாணி’ பெயரில் அரங்கமும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.*

*சேலத்தில் நடைபெற்ற நம் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில், ‘பெரியார் நுழைவாயில்’, ‘அண்ணா திடல்’, ‘கலைஞர் அரங்கம்’, ‘பேராசிரியர் மேடை’, ‘வீரபாண்டியார் கொடி மேடை’, ‘முரசொலி மாறன் புகைப்படக் கண்காட்சி அரங்கம்’ ஆகியவற்றோடு வீரபாண்டி ஆ.ராஜா, வீரபாண்டி செழியன், சந்திரசேகர், நீட் போராளிகள் அனிதா மற்றும் தனுஷ் ஆகியோரின் பெயர்களாலும் தோரண வாயில்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.*

பாசறை படிப்பறை

# ‘உடுமலை’ உடன்பிறப்பு!

**கௌதம் ராஜ்** 2

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

*தி.மு.கழகம் தொடங்கப்பட்ட முதல் சில ஆண்டுகளில் பல்வேறு தடைகளை மீறி வீறுகொண்டு வளர்ந்த வரலாறு சுவாரசியம் நிறைந்தவை. ஆனால், அவற்றில் பெரும்பாலானவை பதிவு செய்யப்படாமல் தொண்டர்களின் நினைவுகளாகத் தேங்கி மறைந்தவை. விதிவிலக்காக எஞ்சி நிற்கும் சில புத்தகங்களும் உண்டு. அப்படியான நூல்தான் புலவர் பண்ணன் எழுதியுள்ள ‘ப.நா.வுடன் 16 ஆண்டுகள்’.*

*அமைப்பைக் கட்டவும், மக்களைத் திரட்டவும், மிட்டா மிராசுகள் நிறைந்திருந்த காங்கிரஸ் கட்சியை எதிர்கொள்ளவும், சுயமரியாதைச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பவும், பல்வேறு போராட்டங்களை நடத்தவும், கழகத் தொண்டர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தை ஏராளம். அப்படி ப.நாராயணன் அவர்கள் மேற்கொண்ட பணிகளையும், அந்தப் பணிகளின்போது ஏற்பட்ட அனுபவங்களையும் உணர்வுப்பூர்வமான நடையில் விவரித்துள்ளார் புலவர் பண்ணன். ப.நா.வுடன் இணைந்து செயல்பட்ட 16 ஆண்டு கால நினைவுகளைத் தொகுத்துப் புத்தகமாக நமக்களித்துள்ளார் பண்ணன். இந்நூலை வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு என்பதை விடவும், கழகத்தைப் பற்றிய நினைவுக்குறிப்பு என்றால் தகும்.*




*தமிழ்நாட்டின் மேற்கு மண்டலத்தில் கழகம் வளர்க்க, தொண்டாற்றிய முன்னோடிகளில் முக்கியமானவர் உடுமலை ப.நாராயணன். எளிய குடும்பத்தில் பிறந்து சைக்கிள் கடை வைத்து, அந்த சைக்கிள் கடையைக் கழக அலுவலகமாகப் பயன்படுத்தி, ஓயாமல் கழகப் பணியாற்றி, ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளராகவும், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்படும் நிலைக்கு உயர்ந்தார் ப.நா.*

*ஒலிப்பெருக்கியுடன், கழகக் கொள்கை சார்ந்த துண்டுப் பிரசுரங்களைத் தூக்கிச் சுமந்து சைக்கிளில் பிரச்சாரத்தைத் தொடங்கியது முதல், கோவை மாவட்டத்தில் வலுவான தொழிற்சங்கங்களைக் கட்டி எழுப்பியது வரையிலான வரலாற்றை பண்ணன் விவரிக்கிறார்.*

*புலவர் பண்ணன் மற்றும் உடுமலை ப.நா ஆகியோருக்கு இடையில் நிலவிய நெருக்கமான நட்பும், பல்வேறு முரண்பாடுகளுக்கு இடையிலும் அந்த நட்பு நீடித்து நிலைத்த விதத்தையும், நாடாளுமன்ற உறுப்பினராகிய பின்னரும் நன்றி மறவாமல் நட்புக்காகச் செய்த உதவிகளையும், அந்தக் காலத்தில் இரண்டு கழகத்தவருக்கும் இடையே நிலவிய உறவை வெளிப்படுத்துகிறது.*

*பெரியாரின் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை, பேரறிஞர் அண்ணா தொடங்கிய போது கோவையிலிருந்து பல முக்கிய தலைவர்கள் உருவாகினர். ஈ.வெ.கி.சம்பத், சாதிக் பாட்சா, கே.ஏ.மதியழகன், கோவை.செழியன், மு.இராமநாதன், பி.ஏ.சாமிநாதன், மு.கண்ணப்பன் இப்படியான மேற்கு மண்டலத்தின் பெரும் படையில் உடுமலை ப.நாராயணன் அவர்களின் பங்கு முக்கியமானது என்பதைத்தான் புலவர் பண்ணன் எழுதியுள்ள இந்நூல் நமக்கு உணர்த்துகிறது.*


*2000-ஆம் ஆண்டு இந்த நூலின் முதல் பதிப்புக்கு மறைந்த பேராசிரியர் அன்பழகன் அவர்கள் அணிந்துரை எழுதியுள்ளார். கழகத்தவர்களால் எழுதப்படும் தன் வரலாறுகளும், நினைவுக் குறிப்புகளும் ஏன் முக்கியமானவை என்பதை ஒட்டி, இந்த அணிந்துரை அமைந்துள்ளது. மேற்கு மண்டலத்தில் கழகம் வளர்ந்த கதையையும், கழகம் வளர்த்த முன்னோடிகளையும், தொண்டருக்கும் தலைவருக்கும் இடையில் நிலவிய அணுக்கமான உறவையும் அறிந்துகொள்ள இந்நூல் அவசியம் உதவும்.*

*23 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபதிப்பு கண்டுள்ள இந்த நூல், சமகால வாசிப்புக்கும் அவசியமாகிறது.*

## திராவிடத்தால் வாழ்கிறோம்

415

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131